අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref. | ED/01/28/6/14 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | | දිනය / திகதி / Date | 2026.03 20 |

அமைச்சு சுற்றுநிருபம் : 07/2026

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலய கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து மாகாண/வலய வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவேனா கல்வி நிறுவனங்களதும் பிரிவெனாதிபதிகள்,
அனைத்து அதிபர்கள்

## அகில இலங்கை வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகள்

உலகளாவிய போக்குகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியுடன் வணிகப் பாடத்துறையும் பரந்த அளவிலான நவீனமயப்படுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. எமது நாட்டின் பிரதேச வளங்களின் பயன்பாட்டை அதிகரித்து, உள்நாட்டு உற்பத்திக்குச் சேர்க்கப்படும் பெறுமதியை உயர்த்துவதோடு, இயங்குநிலைச் சமூகத்தில் எழும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய பலமான, ஆக்கத்திறன் மிக்க பிள்ளைகளை கல்வியின் ஊடாக உருவாக்குவது காலத்தின் தேவையாகும். அதற்கமைய, பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான 'வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையினால் வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

அது தொடர்பில் இந்தச் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்கள் இனிமேல் வலுவில் இருக்கும்.

### 1.0 குறிக்கோள்கள்

1. வணிகக் கல்விக்காக மாணவர்களின் நாட்டம் மற்றும் ஈர்ப்பை அதிகரித்தல்.
2. மாணவர்களின் பாடம் தொடர்பான அறிவு, மனப்பாங்கு மற்றும் நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை மேம்படுத்துதல்.
3. மாணவர்களின் முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கங்களுக்கான வாய்ப்புகளை வழங்குதலும் மதிப்பீடு செய்தல்
4. தர்க்கரீதியான சிந்தனையுடன் கூடிய, முயற்சியாண்மை மற்றும் நிதியியல் அறிவு கொண்ட ஒருவரைச் சமூகமயப்படுத்துதல்
5. பல்வேறு திறமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் தொழிற் கல்விக்கான அதிக பிரவேச வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

### 2.0 போட்டித் தொடரின் தன்மை

2.1 அகில இலங்கை வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டித் தொடரானது சிங்களம், தமிழ் மற்றும் இருமொழி என மொழி ரீதியாகப் பிரிக்கப்படாமல் இரண்டு பிரதான போட்டிகளாக நடைபெறும்.

- வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டி
- முயற்சியாண்மைத் திறன் முன்வைப்புப் போட்டி



CamScanner

2.2 வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டியானது வணிகப் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றக்கூடிய ஒரு தனிநபர் போட்டியாகும். இது தரம் 10-11 மற்றும் தரம் 12-13 என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் ஒரு எழுத்துப் பரீட்சையாகும்.

2.3 முயற்சியாண்மைத் திறன்களை முன்னிலைப்படுத்தும் போட்டியானது தரம் 6-13 வரையில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் பங்குபற்றக்கூடிய ஒரு தனிநபர் போட்டியாகும். இது தரம் 6-9, தரம் 10-11 மற்றும் தரம் 12-13 என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

2.4 மேற்கூறிய இரண்டு பிரதான போட்டிகளும் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டம் வரை நடத்தப்பட்டு மதிப்பீடுகள் செய்யப்படும். இதன்போது, கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச வெற்றியாளர்களை மாத்திரமே தெரிவு செய்து முன்னிலைப்படுத்த வேண்டும். புள்ளிகள் சமமாக வரும் சந்தர்ப்பங்களில், முறையான செயன்முறை ஒன்றைப் பயன்படுத்தி வெற்றியாளர்களைத் தெரிவு செய்வது மதிப்பீட்டுக் குழுவின் பொறுப்பாகும்.

| போட்டி மட்டம் | தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவ, மாணவியரின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டி | | முயற்சியாண்மைத் திறன் முன்வைப்புப் போட்டி | | |
| | தரம் 10-11 | தரம் 12-13 | தரம் 6-9 | தரம் 10-11 | தரம் 12-13 |
| பாடசாலை | 03 | 03 | 02 | 02 | 02 |
| வலயம் | 03 | 03 | 02 | 02 | 02 |
| மாகாணம் | 03 | 03 | 02 | 02 | 02 |

அட்டவணை இலக்கம் 1 - அகில இலங்கை வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டித் தொடரில் தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை

2.5. போட்டிகள் நடாத்தப்படவேண்டிய கால வரையறைகள்

| பாடசாலை மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | அகில இலங்கை மட்டம் |
|---|---|---|---|
| மே 31 இற்கு முன்னர் | ஜூலை 31 இற்கு முன்னர் | செப்டெம்பர் 30 இற்கு முன்னர் | ஒக்டோபர் 31 இற்கு முன்னர் |

அட்டவணை இலக்கம் 2 - அகில இலங்கை வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகளுக்கான கால வரையறை

## 03. வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டி நடாத்தப்பட வேண்டிய விதம் மற்றும் மதிப்பீடு செய்தல்

### 3.1 பாடசாலை மட்டம்

- இதற்காக பாடசாலையின் வணிகப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியர்/வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் அல்லது அதிபரால் பெயரிடப்படும் ஆசிரியரின் தலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
- இப்போட்டிக்கு தரம் 10-11 மற்றும் தரம் 12-13 வணிகப் பாடங்களைக் கற்கும் மாணவர்கள் தகுதி பெறுவதுடன், ஒவ்வொரு பிரிவுக்கும் பாடசாலை மட்டத்தில் ஒரு பரீட்சை நடத்தப்பட வேண்டும்.
- அதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியல் (சுற்றுநிருபத்தின் இணைப்பு 01), அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.



CamScanner

**3.2 வலய மட்டம்**

- வலய மட்டப் போட்டிகளை ஒழுங்குசெய்தல், மதிப்பீடு செய்தல், வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்காக முன்னிலைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் **வலயத்தின் வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் அல்லது பாட ஒழுங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு உரியதாகும்.**
- பாடசாலை மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் வலய மட்டத்தில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவது அவசியமாகும். வலய மட்டப் பரீட்சைக்குத் தேவையான வினாத்தாள்கள், இணைப்பு 02 இல் உள்ள வினாத்தாள் கட்டமைப்புக்கு அமைய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிகக் கிளையினால் வழங்கப்படும்.
- அதற்கமைய, ஒவ்வொரு போட்டிப் பிரிவின் கீழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலை (இணைப்பு 01), வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டு அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும்.

**3.3 மாகாண மட்டம்**

- மாகாண மட்டப் போட்டிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் மாணவர்களைத் தேசிய மட்டப் போட்டிகளுக்காக முன்னிலைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் **மாகாண வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் அல்லது பாட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு உரியதாகும்.**
  வலயப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாகாண மட்டத்தில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.
- அதற்கான வினாத்தாள்கள் இணைப்பு 02 இல் உள்ள வினாத்தாள் கட்டமைப்புக்கு அமைய கல்வி அமைச்சின் வணிகக் கிளையினால் வழங்கப்படுவதுடன், குறிப்பிடப்படும் ஒரு திகதியில் பரீட்சை நடத்தப்பட வேண்டும்
- மாகாண மட்டப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெயர்ப் பட்டியலுடன் தொடர்புடைய விடைத்தாள்களை அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளைக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

**3.4 தேசிய மட்டம்**

- மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான மதிப்பீட்டுச் செயற்பாடுகள், **தேசிய மட்ட வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய பொறுப்புகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையினால் மேற்கொள்ளப்படும்.**
- தேசிய மட்டத்தில் தனியான எழுத்துப் பரீட்சை எதுவும் நடத்தப்படமாட்டாது. மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பரீட்சையின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே தேசிய மட்ட வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
- கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையினால் அந்த விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு பிரிவின் கீழும் மாகாண மட்ட வெற்றியாளர்களும் தேசிய மட்ட வெற்றியாளர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.



CamScanner

**3.5 வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டியில் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்**

| நிலை | விருது |
|---|---|
| முதலாம் நிலை | தங்கப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| இரண்டாம் நிலை | வெள்ளிப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| மூன்றாம் நிலை | வெண்கலப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| 4, 5 ஆம் நிலைகள் | சிறந்த திறமைச் சான்றிதழ் |
| 6 – 10 வரையான நிலைகள் | திறமைச் சான்றிதழ் |
| 11 முதல் | பங்குபற்றுகைச் சான்றிதழ் |

அட்டவணை இலக்கம் 3 - வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டியில் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்.

## 4.0 முயற்சியாண்மைத் திறன்களை முன்னிலைப்படுத்தும் போட்டி

### 4.1 பாடசாலை மட்டம்

- இப்போட்டிக்கான பொறுப்பை அதிபரால் பாடசாலையின் வணிகப் பிரிவுத் தலைவர் / வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் அல்லது பெயரிடப்படும் வேறொரு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்
- இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள், முயற்சியாண்மைக்கான முன்மொழிவு மற்றும் விண்ணப்பப் படிவத்தை (சுற்றுநிருபத்தின் இணைப்பு 4 இன் படி) குறித்த திகதிக்கு முன்னர் வணிகப் பாட ஆசிரியரிடம் அல்லது குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்
- மாணவர்களால் சமர்ப்பிக்கப்படும் முயற்சியாண்மைக்கான முன்மொழிவுகளை, அதிபரால் பெயரிடப்படும் மூவர் அடங்கிய குழுவொன்று இணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை மட்ட நியதிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, ஒவ்வொரு வயதுப் பிரிவின் கீழும் இருவர் வீதம் தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் தகவல்களை இணைப்பு 1 இன் மாதிரிப் படிவத்திற்கு அமைய அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு, அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### 4.2 வலய மட்டம்

- வலய மட்டப் போட்டிகளை ஒழுங்கு செய்தல், மதிப்பீடு செய்தல், வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்காக முன்னிலைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் **வலயத்தின் வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் அல்லது பாட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு உரியதாகும்.**
- பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்பட்ட வெற்றியாளர்கள், வலய மட்டத்தில் மீண்டும் இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள வலய மட்ட நியதிகளுக்கு அமைய மதிப்பீடு செய்யப்படுவார்கள். அந்தப் போட்டியில் அந்தந்த வயதுப் பிரிவுகளின் கீழ் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற தலா இரு வெற்றியாளர்களைத் தெரிவு செய்து, இணைப்பு 1 இற்கு அமைய வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட மாணவர் பெயர்ப் பட்டியல் மற்றும் தகவல்களை அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்
- வலய மட்ட மதிப்பீட்டுக் குழுவின் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக குறைந்தது மூன்று உறுப்பினர்களாவது இருத்தல் வேண்டும்.



CamScanner

**வலய மட்ட மதிப்பீட்டுக் குழு**

I. வலயக் கல்விப் பணிப்பாளரால் பெயரிடப்படும் வேறொரு பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்.
II. வலயத்தின் வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்/ ஆசிரியர் ஆலோசகர் அல்லது வளவாளர் ஒருவர்
III. வலயத்தின் வேறொரு பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர் ஒருவர்.
IV. பிரதேச செயலகத்தின் சிறு வணிக அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அல்லது வேறொரு நிபுணர்

## 4.3. மாகாண மட்டம்

- மாகாண மட்டப் போட்டிகளை ஒழுங்கு செய்தல், மதிப்பீடு செய்தல், வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவர்களைத் தேசிய மட்டப் போட்டிகளுக்காக முன்னிலைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் **மாகாண வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் அல்லது பாட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு உரியதாகும்.**
- வலய மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்பட்ட வெற்றியாளர்கள், மாகாண மட்டத்தில் மீண்டும் இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கமைய மதிப்பீடு செய்யப்படுவார்கள். இதன்போது, வலய வெற்றியாளர்கள் மாகாண மதிப்பீட்டுக் குழுவிடம் தமது முன்வைப்புகளை மேற்கொள்ள வேண்டும். சமூகமளிக்க முடியாத மாணவர்களுக்கு நிகழ்நிலை ஊடாகவேனும் தமது முன்வைப்புகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.
- அந்தப் போட்டியில் அந்தந்த வயதுப் பிரிவுகளின் கீழ் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற தலா இரு வெற்றியாளர்களைத் தெரிவு செய்து, இணைப்பு 1 இற்கு அமையத் தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் மற்றும் தகவல்களை மாகாணக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டு, கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளைக்கு அட்டவணை இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும்.
- போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் மொழி ஊடகத்திற்கு ஏற்ப மாகாண மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும்
- இப்போட்டிக்கான மாகாண மட்ட மதிப்பீட்டுக் குழுவின் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக குறைந்தது மூன்று உறுப்பினர்களாவது இருத்தல் வேண்டும்

**மாகாண மட்ட மதிப்பீட்டுக் குழு**

I. மாகாணக் கல்விப் பணிப்பாளரால் பெயரிடப்படும் வேறொரு பாடத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர்
II. மாகாணத்தின் வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்.
III. மாகாணத்தின் வேறொரு பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர் ஒருவர்.
IV. முயற்சியாண்மை தொடர்பான தொழில்முறை அல்லது கல்விப் பின்னணியைக் கொண்ட ஒரு வெளிவாரி நிபுணர்



CamScanner

**இணைப்பு 2**

**வணிகப் பாடம் சார் பொது அறிவுப் போட்டி - வினாத்தாள் கட்டமைப்பு**

| **தரம்** | **வினாத்தாளின் பெயர்** | **வினாத்தாள் கட்டமைப்பு** |
|---|---|---|
| தரம் 10-11 | வணிகப் பாடம் சார்ந்த பொது அறிவுப் போட்டி | • 40 வினாக்களைக் கொண்டது<br>• முதலாம் வினா கட்டாயமானது. இது முயற்சியாண்மை மற்றும் நிதியியல் அறிவு தொடர்பான ஒரு சம்பவக் ஆய்வு ஆகும். இச் சம்பவ ஆய்வானது 10 குறுகிய வினாக்களைக் கொண்டிருக்கும்<br>• 11 முதல் 20 வரையிலான வினாக்கள் வணிகக் கல்வி பாடத்திட்டத்தை உள்ளடக்கிய 10 குறுகிய வினாக்களாகும்<br>• 21 முதல் 30 வரையிலான வினாக்கள் கணக்கீடு பாடத்திட்டத்தை உள்ளடக்கிய 10 குறுகிய வினாக்களாகும்<br>• 31 முதல் 40 வரையிலான வினாக்கள் சமகால வணிக அறிவு தொடர்பான வினாக்களாக அமையு<br>• இந்த வினாத்தாளுக்காக 1 ½ மணித்தியாலங்கள் வழங்கப்படும்.. |
| தரம் 12 -13 | வணிகப் பாடம் சார்ந்த பொது அறிவுப் போட்டி | • இவ் வினாத்தாள் 5 பகுதிகளைக் கொண்டது. வினாத்தாளில் மொத்தம் 70 வினாக்கள் காணப்படும்<br>1. கணக்கீடு (கட்டாயப் பகுதி) - இப்பகுதிக்காக 20 குறுகிய வினாக்கள் உள்ளன<br>2. பாடம் சார்ந்த சமகால அறிவு (கட்டாயப் பகுதி) - 10 வினாக்கள் உள்ளன.<br>3. வணிகக் கல்வி<br>4. பொருளியல்<br>5. தகவல் தொழில்நுட்பம்<br>6. வணிகப் புள்ளிவிபரவியல்<br>பகுதி 3, 4, 5, 6 ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 10 குறுவினாக்கள் வீதம் காணப்படும். இந்தப் 4 பகுதிகளிலிருந்து ஏதேனும் 2 பகுதிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.<br>• பகுதி 1, 2 இல் உள்ள 30 வினாக்களுடன், பகுதி 3, 4, 5 மற்றும் 6 ஆகியவற்றில் இருந்து தெரிவு செய்யப்படும் 2 பகுதிகளின் 20 வினாக்களையும் சேர்த்து மொத்தம் 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்<br>• ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.<br>• இந்த வினாத்தாளுக்காக 1 ½ மணித்தியாலங்கள் வழங்கப்படும். |

**இணைப்பு 1**

**<u>வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டித் - 2026</u>**

**<u>வெற்றியாளர் பெயர்ப்பட்டியல்</u>**

***பாடசாலை*** :- ..........................................................................................................................

***வலயம்***:- ............................................ ***மாகாணம்*** :-............................................

முயற்சியாண்மைத் திறன் முன்வைப்பு போட்டி

| தொடர் இலக்கம் | தரத்தின் அடிப்படையிலான பிரிவு | மாணவ, மாணவிகள் | பெற்ற புள்ளிகள் | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 01 | தரம் 6 – 9 | | | |
| 02 | | | | |
| 03 | தரம் 10 – 11 | | | |
| 04 | | | | |
| 05 | தரம் 12 –13 | | | |
| 06 | | | | |

வணிகப் பாடம் சார்ந்த பொது அறிவுப் போட்டி

| தொடர் இலக்கம் | தரத்தின் அடிப்படையிலான பிரிவு | மாணவ, மாணவிகள் | பெற்ற புள்ளிகள் | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 01 | தரம் 10 – 11 | | | |
| 02 | | | | |
| 03 | | | | |
| 04 | தரம் 12 –13 | | | |
| 05 | | | | |
| 06 | | | | |

.................................... சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடாத்தி, வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியலை பெறுபேறுகளுடன் உறுதிப்படுத்தி இதனுடன் சமர்ப்பிக்கின்றேன்

.......................................................... ....................................................

வணிகப் பிரிவுத் தலைவர் அதிபர்

கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்

அமைச்சின் கல்விப் பண்புத்தர விருத்திப் பிரிவின் மேலதிகச் செயலாளருக்கும் உரித்துடையதாகும்

IV. புதிய முயற்சியாண்மை குறித்து விவரிக்கும் போது, தற்போதுள்ள நிலைமை, புதிய நிலைமை மற்றும் அவ்விரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளைத் தெளிவாக விளக்க வேண்டும்

V. மாணவர்களால் சமர்ப்பிக்கப்படும் முயற்சியாண்மைசார் முன்மொழிவானது அவர்களின் சொந்தக் கருத்தாக இருத்தல் வேண்டும். மோசடியான, போலியான, முறைகேடான அல்லது சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் முயற்சியாண்மை சார்ந்த கருத்துக்களை/முன்மொழிவுகளை இப்போட்டித் தொடரில் சமர்ப்பிக்க முடியாது.

அகில இலங்கை வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களும், போட்டியின் ஒவ்வொரு கட்டத்திலும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றுவதற்கும், நடுவர் குழுவின் முடிவை இறுதியான முடிவாக ஏற்றுக்கொள்வதற்கும் இணங்குதல் வேண்டும். அதேபோன்று, சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மீறிச் செயற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டால், போட்டியின் எந்தவொரு கட்டத்திலும் அத்தகைய விண்ணப்பதாரர்களைப் பெறுபேறுப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் உள்ளிட்ட ஏனைய தீர்மானங்களை மேற்கொள்வதற்குமான அதிகாரம் கல்வி அமைச்சினைச் சாரும்.

நாலக களுவெவ
செயலாளர்

### 4.4. தேசிய மட்டம்

- தேசிய மட்டப் போட்டிகளை ஒழுங்கு செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புகள் **கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு உரியதாகும்**.
- மாகாண மட்ட வெற்றியாளர்கள், தேசிய மட்டத்தின் போது இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய மட்ட நியதிகளுக்கமைய மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

### 4.5 முயற்சியாண்மைத் திறன்களை முன்வைப்பதற்கான போட்டியில் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்

| நிலை | விருது |
|---|---|
| முதலாம் நிலை | தங்கப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| இரண்டாம் நிலை | வெள்ளிப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| மூன்றாம் நிலை | வெண்கலப் பதக்கத்துடன் சான்றிதழ் |
| 4, 5 ஆம் நிலைகள் | சிறந்த திறமைச் சான்றிதழ் |
| 6 – 10 வரையான நிலைகள் | திறமைச் சான்றிதழ் |
| 11 முதல் | பங்குபற்றுகைச் சான்றிதழ் |

அட்டவணை இலக்கம் 4 – முயற்சியாண்மைத் திறன்களை முன்வைப்பதற்கான போட்டியில் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்

- கல்விப் பண்புத்தர விருத்திப் பிரிவின் மேலதிகச் செயலாளரினால் பெயரிடப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
- அது தொடர்பான தேசிய மட்ட மதிப்பீட்டுக் குழுவின் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**தேசிய மட்ட மதிப்பீட்டுக் குழு**

I. வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையின் கல்விப் பணிப்பாளர் / பெயரிடப்பட்ட வேறொரு பாடப் பணிப்பாளர்

II. வணிக மற்றும் வர்த்தகக் கல்வி கிளையின் ஒரு பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்.

III. வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான மாகாண பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள் இருவர்

### 4.6 போட்டி நிபந்தனைகள்

I. மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் ஒரு மாணவர் தனது முன்வைப்பை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் நேரம் 10 நிமிடங்கள் ஆகும்

II. மாணவர்கள் வலய மட்டப் போட்டியில் சமர்ப்பித்த அதே ஆக்கத்தையே மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலும் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதன் மூலப் ஆக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சில பெறுமதி சேர்த்தல்களை அல்லது மேம்படுத்தல்களைச் செய்ய முடியும்.

III. போட்டி தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் பாடசாலை மட்டத்தில் அதிபருக்கும், வலய மட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாண மட்டத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், தேசிய மட்டத்தில் கல்வி



CamScanner

**இணைப்பு 3**

**வணிக மற்றும் முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகள் - 2026**

பாடசாலை மட்டம்

| | நியதி | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு / வேலைவாய்ப்பு உருவாக்கம் / ஏனைய நன்மைகள் | 20 |
| 02 | நுகர்வோர் / சமூகத் தேவையைச் சரியாக இனங்கண்டுள்ளமை | 10 |
| 03 | நடைமுறை ரீதியாகச் செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் | 25 |
| 04 | உற்பத்தியின் / சேவையின் உற்பத்தித்திறன் | 10 |
| 05 | சூழல் நேயம் / சமூக நலன்களைக் கொண்டிருத்தல் | 10 |
| 06 | இறுதி உற்பத்தி, மாதிரி அல்லது உதாரணம் | 25 |

வலய/ மாகாண/ தேசிய மட்டம்

| | நியதி | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு / வேலைவாய்ப்பு உருவாக்கம் / ஏனைய நன்மைகள் | 20 |
| 02 | நுகர்வோர் / சமூகத் தேவையைச் சரியாக இனங்கண்டுள்ளமை | 10 |
| 03 | நடைமுறை ரீதியாகச் செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் | 25 |
| 04 | உற்பத்தியின் / சேவையின் உற்பத்தித்திறன் | 10 |
| 05 | சூழல் நேயம் / சமூக நலன்களைக் கொண்டிருத்தல் | 10 |
| 06 | இறுதி உற்பத்தி, மாதிரி அல்லது உதாரணம் | 20 |
| 07 | முன்வைப்பதில் வெளிக்காட்டிய ஒட்டுமொத்தத் திறமை | 05 |

**இணைப்பு 4**

# முயற்சியாண்மைத் திறன் மதிப்பீட்டுப் போட்டிகள் - 2026

## மாதிரி விண்ணப்பப் படிவம்

01. பாடசாலையின் பெயர் :- ..........................................................................

02. விண்ணப்பதாரரின் விபரங்கள்

i. முழுப் பெயர் :- ..........................................................................

ii. பால் :- ..........................................................................

iii. வயது :- .......................... பிறந்த திகதி:- ....................................

iv. தரம் :- ..........................

03. **வணிகத் செயற்றிட்டம்** (இவை சுருக்கமாக புள்ளிகளாகக் காட்டப்படுகின்றன)

3.1 உங்கள் முயற்சியாண்மைச் செயற்றிட்டம் சார்ந்த துறை :-

1. பொருள் ☐
2. சேவை ☐
3. ஒரு சுய உருவாக்கம் ☐

3.2 அது பற்றிய சுருக்கமான விபரம்

1. இனங்காணப்பட்ட பிரச்சினை ..........................................................................

..........................................................................

2. உள்ளீடுகளின் பயன்பாடு/ உற்பத்திச் செயன்முறை ..........................................

..........................................................................

3. பொருள்/ சேவை/ உருவாக்கத்தின் தன்மை..........................................................................

..........................................................................

4. அதன் தனித்துவமான பண்புகள்: ..........................................................................

..........................................................................

5. இலக்குச் சந்தை / பயனாளிகள்:..........................................................................

6. விநியோகிக்கும் முறை/ சேவை வழங்கும் முறை ..........................................

7. சந்தைப்படுத்தல் உத்திகள்/ வழங்கல் உத்திகள் ..........................................

**அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்**

விண்ணப்ப இலக்கம்: ........................................

பாடசாலையில் சமர்ப்பித்த திகதி: .................................

மதிப்பீடு செய்த திகதி: .......................................

உறுதிப்படுத்தல்

................................................. பாடசாலையின் ..................... தரத்தைச் சேர்ந்த ................................................. எனும் மாணவன்/மாணவி முயற்சியாண்மைத் திறன் மதிப்பீடு - 2026 போட்டியில் முதலாம்/ இரண்டாம் நிலையைப் பெற்றுக்கொண்டார் என உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்கின்றேன்

அதிபரின் கையொப்பமும் திகதி

உத்தியோகபூர்வ முத்திரையும்: